**வீதி வலையமைப்பு முன்னேற்ற முன்னுரிமை வீதிச் செயற்திட்டம் - 2 - 2014**

வீதி வலையமைப்பு முன்னேற்ற முன்னுரிமை வீதிச் செயற்திட்டம் - 2 இன் 2014 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சீன அபிவிருத்தி வங்கிக் கூட்டுத்தாபனத்திற்கும் இடையேயான 2011 மார்ச் 31 ஆந் திகதிய 4500062212011110472 ஆம் இலக்க கடன் வசதி உடன்படிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளிப்பு, காலம் என்பன.

வீதி வலையமைப்பு முன்னேற்ற முன்னுரிமை வீதிச் செயற்திட்டம் - 2 இன் கடன் வசதி உடன்படிக்கைப் பிரகாரம், முன்னைய நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள், கப்பற்துறை அமைச்சும் தற்போதைய உயர் கல்வி மற்றம் நெடுஞ்சாலைகள் அமைச்சும் நிறைவேற்று முகவர்கள் ஆகும். செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவர் வீதி அபிவிருத்தி அதிகார சபையாகும். நிர்மாண ஒப்பந்தங்களின் கீழ் குறிப்பிடப்பட்ட 591.48 கிலோ மீட்டர் முன்னுரிமை வீதியை அபிவிருத்தி செய்து புனரமைப்பதே செயற்திட்டத்தின் நோக்கமாகும். கடன் வசதி உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 61,438 மில்லியனுக்குச் சமமான 556 அமெரிக்க டொலர்களாகும். இதில் ரூபா 55,250 மில்லியனுக்குச் சமமான 500 மில்லியன் அமெரிக்க டொலர்களை சீன அபிவிருத்தி வங்கிக் கூட்டுத்தாபனம் வழங்குவதற்கு உடன்பட்டிருந்தது. 2011 யூன் 28 ஆந் திகதி தனது நடவடிக்கைகளை ஆரம்பித்த செயற்திட்டம் 2014 யூன் 28 ஆந் திகதி அதனைப் பூர்த்தி செய்யவிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்டக் காலப்பகுதி 2014 திசெம்பர் 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு ஏற்ப நான் கணக்காய்வை மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில்

கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிசார் கூற்றுக்களில் காணப்பட்ட செலவினம் செயற்திட்டத்தால் பேணப்பட்ட உயரளவு நிதிசார் அறிக்கைகள் மற்றும் செயன் முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக கணக்கிணக்கம் செய்யப்பட்டுள்ளனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழான பற்றுதல்கள் கடன் வசதி உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டவாறு மேற்கொள்ளப்பட்டனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(எ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்பத் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஐ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபாரிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இது வரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப் பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களால் எழும் சீராக்கங்களால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர,

(அ) செயற்திட்டமானது 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதி அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) கடன் வசதிகள் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகிறேன்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

2014 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்களில் காட்டப்பட்ட நடைபெறும் வேலைகளது மீதியாகிய ரூபா 69,881 மில்லியன் மற்றும் ஒப்பந்தக்காரருக்கு கொடுப்பனவு செய்ய வேண்டிய ரூபா 11,458 மில்லியன் என்பன கணக்கீட்டுத் தவறு காரணமாக ரூபா 245.29 மில்லியன் குறைத்துக் காட்டப்பட்டுள்ளன.

## 3. நிதி மற்றும் பௌதீகச் செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான மற்றும் 2014 திசெம்பர் 31 வரையான பாதிடப்பட்ட நிதி ஏற்பாடு, மற்றும் நிதிப் பயன்பாடு தொடர்பான சில குறிப்பிடத்தக்க புள்ளி விபரம் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கையின் பிரகாரம் நிதியளிப்பிற்கு உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான வரவு, செலவுத் திட்ட மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட நிதியேற்பாடு | பயன்படுத்திய நிதி: மீளாய்வாண்டின் 2014 ஆம் ஆண்டினுள் | | பயன்படுத்திய நிதி: 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
|---|---|---|---|---|---|---|---|
| | அமெரிக்க டொலர் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | அமெரிக்க டொலர் | ரூபா மில்லியன் | அமெரிக்க டொலர் | ரூபா மில்லியன் |
| சீஅவ | 500 | 55,250 | 19,368.6 | 147.00 | 19,267.7 | 375.94 | 49,328 |
| இலங்கை அரசாங்கம் | 56 | 6,188 | 1,819.3 | 13.88 | 1,819.3 | 46.87 | 6,150 |
| | 556 | 61,438 | 21,187.9 | 160.88 | 21,087.0 | 422.81 | 55,478 |

மேற்படி தகவல்களின் பிரகாரம், 2014 டிசெம்பர் 31 வரை செயற்திட்டத்திற்கான ஏற்பாடு செய்யப்பட்ட 500 மில்லியன் அமெரிக்க டொலர் கடனில் 375.94 மில்லியன் அமெரிக்க டொலர் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது. கடனின் கீழான ஒதுக்கத்தில் 75 சதவீதம் மாத்திரமே மீளாய்வாண்டின் இறுதி வரை பயன்படுத்தப்பட்டிருந்தமை இதன் மூலம் சுட்டிக்காட்டப்படுகிறது.

### 3.2 பௌதிக முன்னேற்றம்

செயற்திட்ட நடவடிக்கைகளில் 476.48 கிலோ மீட்டர் தேசிய வீதியின் 18 பிரிவுகளையும் நுவரெலியா மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களில் 11.5 கிலோ மீட்டர் மாகாண வீதிகளையும் புனரமைத்தல், 2 மேம்பாலங்களை நிர்மாணித்தல் மற்றும் 18 பாலங்களை மீள நிர்மாணித்தல் என்பன உள்ளடங்கியிருந்தன. கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், பதுளை, களுத்துறை, கண்டி ஆகிய மாவட்டங்களின் தேசிய

வீதிகளது 3 பிரிவுகளைத் தவிர நுவரெலியா மாவட்டத்தின் மாகாண வீதிகளின் அனைத்து வீதிப்பணிகள், மேம்பால நிர்மாண வேலைகள், பாலங்களை மீள நிர்மாணத்தல் என்பன யாவும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தால் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. 2014 ஜுன் 30 இல் உள்ளவாறு தேசிய வீதிகளினதும் மாகாண வீதிகளினதும் புனரமைப்பு வேலைகள் போதியளவு பூர்த்தி செய்யப்பட்டதாகச் செயற்திட்டப் பணிப்பாளர் அறிவித்திருந்தார்.

**3.3 ஒப்பந்த நிர்வாகம்**

-----------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஹொரவல – பெலவத்தை – பிட்டிகல வீதியின் 6 இடங்களில் மேற்பரப்பானது அஸ்பல்ட் தளமிடலிலிருந்து கொங்கிரீட் தளமிடலுக்கு பரப்பெல்லை மாற்றஞ் செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், செயற்திட்டமானது அவ்வாறான மாற்றங்களுக்கான காரணத்தினை தெளிவுபடுத்தியிருக்கவில்லை. மேலும், அவற்றின் மீதான மாற்றக் கட்டளை 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்படாதிருந்தது. கொங்கிரீட் படைகளில் உள்ள குறைபாடுகள் காரணமாக வீதியில் வாகனப் போக்குவரத்துச் செய்வது திருப்திகரமாக அமையாதிருந்தமை கணக்காய்வாளர்களால் மேற்கொள்ளப்பட்ட தளப் பரிசோதனையின் போது விஜயத்தின்போது புலனாகியது. மேலும், வீதியின் 0+155 கிலோ மீட்டர் வெடிப்புகளும் 4+235 கிலோமீட்டரிலிருந்து

4+240 கிலோ மீட்டர் வரை குழிகளும் தென்பட்டன. இவற்றைவிட, ஒப்பந்த உடன்படிக்கையின் 506.5 (ஜே) ஆம் தொழில் நுட்ப வடிவமைப்பிற்குகமைய இறுக்கமடையச் செய்யப்பட்ட தளத்தினது சகல மாதிரிகளதும் டென்சிடி மார்ஷல் டென்சிடியின் 98 சதவீதத்திற்குக் குறையாமல் இருக்க வேண்டும். ஆயினும், கொங்கிரீட்டை இறுக்கமடையச் செய்வதில் 18 இடங்களில் மேற்படி எல்லையை அண்மித்திருக்கவில்லை.

(ஆ) 2013 திசெம்பர் 11 ஆந் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்யப்படவிருந்த திருவானைக் கெட்டிய – அகலவத்தை வீதிப் புனரமைப்பு ஒப்பந்தம் 2015 ஜுலை 15 வரை நீடிக்கப்பட்டிருந்தது. ஒப்பந்த நிபந்தனைகளின் 8.3 ஆம் விதியின் பிரகாரம், தாமதத்தை நிறைவு செய்து வேலையைக் குறித்த நேரத்தில் முடிப்பதற்கென ஒப்பந்தகாரர் மீளாய்வு செய்யப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் ஒன்றைச் சமர்ப்பித்திருக்க வேண்டும். எனினும், அவ்வாறானதொரு மீளாய்வு செய்யப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தை ஒப்பந்தகாரர் சமர்ப்பித்திருக்கவில்லை. சூழவுள்ள காணி உடமையாளர்களுக்கு ஏற்பட்ட அசௌகரியங்களைக் குறைப்பதற்கு சுற்றாடல் பாதுகாப்புத் திட்டங்களிற்கிணங்க ஒப்பந்தகாரர் இணங்கி நடவாதிருந்தமையும் தள ஒப்பந்தகாரர்ருக்கெதிராக அநேக புகார்கள் செய்யப்பட்டிருந்தமையும் தளப்பரிசோதனையின் போது புலனாகியது.

(இ) முன்னுரிமை வீதிச் செயற்திட்டம் 1 இன் கீழ் புனரமைக்கப்பட்ட தினியவல – கன்கொட்டியாவத்த – மொரவக வீதிகளும் ஹொரவல – பெலவத்த – பிட்டிகல வீதிகளும் ஒரே பிரதேசத்தில் உள்ள வீதிகளாக இருந்த போதும், பிரமாணக்

குறிப்பில் உள்ள கட்டண வீதமானது இவை இரண்டுக்குமிடையே வேறுபட்டிருந்தன. இதன் விளைவாக, அவ்வீதிகளது புனரமைப்பிற்கான கிரயம் முறையே ரூபா 102 மில்லியன் மற்றும் ரூபா 73.5 மில்லியன் எனவிருந்தன. வேறுபட்ட கட்டண வீதம் பயன்படுத்தப்பட்டமைக்கான காரணம் குறித்துக் கணக்காய்விற்கு தெளிவுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.4 மனிதவள முகாமைத்துவம்

2007 ஏப்ரல் 05 ஆந் திகதிய 33 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக நான்கு உசாத்துணையாளர்கள் ஆட்சேர்க்கப்பட்டு மீளாய்வாண்டின்போது ரூபா 2.82 மில்லியன் ஊதியமாகவும் போக்குவரத்துப் படியுமாக செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. செயற்திட்டத்திற்கான அவர்களது பங்களிப்பினை மதிப்பாய்வு செய்வதற்கான செயலாற்றல் அறிக்கைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.